சிசி 64/2022
பு. சா. 1
பெயர் : வரதராஜ்
18.11.2024

**சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். பிரிவு 145(2) மாற்று முறை ஆவணச் சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் கஞ்சநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் இராமலிங்கா மில்லில் தொழிலாளியாக 1975ம் ஆண்டிலிருந்து வேலை பார்த்து 2018ம் வருடம் ஓய்வு பெற்றுவிட்டேன். எதிரியின் கணவர் கோபாலகிருஷ்ணன் மற்றும் எதிரியின் மாமா சுந்தரமூர்த்தி ஆகியோரை நன்றாக தெரியும் என்றால் சுந்தரமூர்த்தி என்னுடன் மில்லில் வேலை பார்த்ததால் 30 வருடமாக தெரியும். கோபாலகிருஷ்ணனை பற்றி எனக்கு சரியாக தெரியாது. பொதுவாக வட்டிக்கு கடன் கொடுத்தால் அசலும், வட்டியும் திருப்பி வரவேண்டும் என்றால் ஆமாம்.

2. எதிரியின் மாமா சுந்தரமூர்த்தி அருப்புக்கோட்டை அருகில் மோட்டார் வைண்டிங் இன்சூலேசன் நிறுவனம் ஒன்று வைத்து நடத்தினார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு மேற்படி நிறுவனம் நடத்திய விவரம் தெரியும் என்றும் 30 ஆண்டு காலம் அவரை தெரிந்துள்ளீர்கள் அந்த தொழிலானது 1 கோடியே 60 இலட்சத்திற்கு கடன் தீர்ப்பாயத்தில் அவருடைய சொத்துக்கள் அனைத்தும் 2017–2018ம் ஆண்டிலேயே ஏலத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது அது தெரிந்திருந்தும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தெரியாது.

3. எதிரி, எதிரியின் கணவர், எதிரியின் மாமா சுந்தரமூர்த்தி ஆகியோர் அருப்புக்கோட்டையில் குடியிருந்த வீடானது தற்போது மில் முதலாளிக்கு கடனுக்காக விற்கப்பட்டது என்றால் கேள்விபட்டேன். 2017–2018ம் வருடத்தில் எதிரியின் குடும்பம் அருப்புக்கோட்டையில் இருந்து மதுரைக்கு கடனால் குடிபெயர்ந்து சென்றுவிட்டார்கள் அது எனக்கு தெரியுமா என்றால் சுந்தரமூர்த்தி வேலைக்கு வந்தது தான் தெரியுமே தவிர அவர் அருப்புக்கோட்டையில் இருந்து வந்தது தான் தெரியும். மற்ற இருவரும் எங்கு குடியிருந்தார்கள் என்று தெரியாது. எதிரிகள் கடன் பெற்று கடனை திருப்பி செலுத்த முடியாமல் ஊரைவிட்டே சென்றுவிட்டார்கள் அப்படியிருக்கையில் நான் அவர்களுக்கு பணம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை.

4. சுந்தரமூர்த்தி 2 வது கொரோனாவில் பாதிக்கப்பட்டு இறந்தார் அது எனக்கு தெரியும். முதல் கொரோனாவில் சுந்தரமூர்த்தி பாதிக்கப்பட்டார் என்றால் மில்லுக்கு வேலை வந்தார். 2018 ம் வருடத்திலிருந்து சுந்தரமூர்த்தி ஓய்வு பெற்ற பின்பு மில்லுக்கு வரவில்லை என்றால் அவர் அலுவலகத்திற்கு வருவார். நான் 2018 ம் வருடம் 8 வது மாதத்தில் பணி ஓய்வு பெற்றேன். சுந்தரமூர்த்தி 18.05.2021 ம் வருடம் 2 வது கொரோனாவால் பாதிக்கப்பட்டு இறந்தார் என்றால் கொரோனாவால் இறந்தார் எந்த தேதி என்று எனக்கு தெரியவில்லை. சுந்தரமூர்த்தி எந்த தேதியில் ஓய்வு பெற்றார் என்று எனக்கு தெரியாது.

5. கோபாலகிருஷ்ணனுக்கு எந்த தேதியில் பணம் கொடுத்தீர்கள் என்றால் 06.01.2021 ம் தேதி கொடுத்தேன். சுந்தரமூர்த்தி உடன் இல்லை. சுந்தரமூர்த்தி பணம் கொடுக்க சொல்லியிருந்தார். பணம் எங்கு வைத்து கொடுத்தேன் என்று நான் புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் நான் வழக்கறிஞரிடம் சொல்லியிருந்தேன் அவர் எழுதியிருந்தாரா என்று தெரியவில்லை. 2021 ம் வருடம் எதிரிக்கு எந்த சொத்தும் இல்லாமல் வங்கியில் கடன் பெற்று தீர்ப்பாயத்தில் ஜப்திக்காக உள்ள நிலையில் அந்த வருடத்தில் நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் இல்லை. 2018 ம் வருடம் நான் ஓய்வு பெற்றுவிட்டேன் அவ்வாறு இருக்கையில் எனக்கு என்ன வருமானம் இருக்கிறது என்றால் ஓய்வு ஊதியமாக மாதம் 3,300/– வருகிறது எனது மகன் வெளிநாட்டில் சிவில் இன்ஜியனராக வேலை பார்த்து மாதம் 2 இலட்ச ரூபாய் சம்பாதிக்கிறார்.

6. நான் எதிரிக்கு மாதம் ரூ.100/–க்கு ரூ 1% வட்டிக்காக பணம் கொடுத்துள்ளேன். நான் எதிரிக்கு கொடுத்த கடன் ரொக்கமாக வைத்திருந்தேன் இடம் வாங்குவதற்காக இருந்த பணத்தை கொடுத்தேன். வங்கியில் இருந்து எடுத்து கொடுக்கவில்லை. நான் வருமான வரி தாக்கல் செய்துவது இல்லை. எனது மகன் NRI Account ல் பணம் அனுப்புவார். நான் செலவிற்கு எடுத்து கொள்வேன். எதிரிக்கு நான் வங்கி பரிவர்த்தனை மூலமாக பணம் கொடுக்கவில்லை. ரொக்கமாக தான் கொடுத்தேன். கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் வங்கியில் எனது கணக்கில் எவ்வளவு இருந்தது என்று நீதிமன்றத்திற்கு வரவழைப்பதற்கு எனக்கு எதுவும் ஆட்சேபனை இல்லை. அருப்புக்கோட்டையில் நான் வேறு யாருக்கும் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை.

7. 06.01.2021 ம் தேதி எதிரி மதுரையில் குடியிருந்து வந்தார் என்றால் ஆமாம். அது கொரோனா காலம் என்பதால் நான் மதுரைக்கு செல்லவோ அவர் அருப்புக்கோட்டைக்கு வருவதற்கோ வாய்ப்பில்லை என்றால் அவர் வந்து வாங்கி சென்றார் அந்த சமயத்தில் போக்குவரத்து

கம்மியாக இருந்தது. பணம் கேட்ட உடனே கொடுத்துவிட்டீர்களா அல்லது ஏற்கனவே கேட்டு வைத்திருந்தார்களா என்றால் ஏற்கனவே கேட்டு வைத்திருந்தார்கள் பணம் வரும்போது தருகிறேன் என்று சொல்லியிருந்தேன். நான் பணம் கொடுப்பதற்கு 2, 3 மாதங்களுக்கு முன்பாக 2, 3 தடவை என்னிடம் பணம் கேட்டிருந்தார்.

8. சுந்தரமூர்த்தி கேட்டு கொண்டதற்கு இணங்க கோபாலகிருஷ்ணனிடம் பணம் கொடுத்தீர்கள் என்றால் கோபாலகிருஷ்ணனும், ரோகினியும் வந்து வாங்கி சென்றார்கள். ஏற்கனவே நான் குறுக்கு விசாரணையில் கோபாலகிருஷ்ணனிடம் பணம் கொடுத்ததாக சொல்லிவிட்டு தற்போது ரோகினியும் உடன் இருந்ததாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞருக்கு தகவல் சொன்னதன்பேரில் தான் வழக்கறிஞர் அறிவிப்பு தயார் செய்யப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்று சொல்லவில்லை என்றால் ஆமாம். எதிரியின் கல்வி, தொழில் ஆகியவற்றை சொல்லவில்லை என்றால் ஆமாம்.

9. எதிரி 5 ஆண்டுகள் பழக்கம் என்று கூறியுள்ள நிலையில் எதிரியின் அம்மா, அப்பா பெயர் தெரியாது. எதிரியின் குடும்பத்தில் நடந்த எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளவில்லை. எதிரி எனது வீட்டில் எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டாரா என்றால் இல்லை. எதிரி எந்த மருத்துவமனையில் வேலை பார்க்கிறார் என்றால் பல் டாக்டராக பணிபுரிகிறார் மதுரையில் ஒரு கல்லூரியில் புரோபசராக இருப்பதாக சொன்னார். நான் கடன் கொடுத்தபோது எதிரி எந்த விலாசத்தில் குடியிருந்தார் என்று தெரியாது என்றால் மதுரையில் இருந்தார். அவருடைய விலாசம் தெரியும் தற்போது ஞாபகம் இல்லை. வழக்கு தாக்கல் செய்யும் போது எதிரி எந்த முகவரியில் இருந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும் வீட்டிற்கு போய் இருக்கிறேன்.

10. உண்மையில் நான் வீட்டிற்கு போயிருந்தால் அவர் வீட்டின் முகவரியை சொல்லியிருப்பேன் நான் அவர் வீட்டிற்கு எதுவும் செல்லவில்லை அதனால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அவர் முகவரி சொல்லமுடியவில்லை, அவர் வீட்டிற்கு ஏற்கனவே நான் சென்றுள்ளேன் ஆகையால் என்னால் அவர் வீடு இருக்கும் இடம் தெரியும். எத்தனை மாதத்திற்கு எதிரி வட்டி கொடுத்தார் என்றால் 1 வருடத்திற்கு வட்டி செலுத்தி வந்தார். எதிரி மாதம் எவ்வளவு வட்டி கொடுத்தார் என்று சொல்லவில்லை என்றால் ஆமாம். ஆனால் எதிரி மாதம் 5 ஆயிரம் ரூபாய் வட்டி கொடுத்தார்.

11. புரோநோட்டின் அடிப்படையில் கடன் கொடுத்தால் வட்டி தரும்போது அதை புரோநோட்டின் பின்னால் வரவு வைப்பார்கள் அப்படி நான் எதுவும் வரவு வைத்துள்ளேனா என்றால் இல்லை. ஒவ்வொரு மாதமும் எந்த தேதியில் வட்டி கொடுத்தார் என்றால் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் இருந்து 10ம் தேதிக்குள் கொடுத்தார். ஒரே தேதியில் கொடுக்கவில்லை. நான் உண்மையில் வட்டி பெற்றிருந்தேன் என்றால் புரோ நோட்டில் வரவு வைத்திருப்பேன் என்றும் நான் வட்டி எதுவும் சொன்ன மாதிரி பெறாததால் தான் வரவு வைக்கவில்லை என்றால் சரியல்ல. 06.01.2021ம் தேதி இந்த வழக்கின் கடன் தொகை தவிர வேறு கடன் எதுவும் நான் எதிரியுடன் செய்தது இல்லை.

12. நான் புகார் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் எதிரியிடம் 06.01.2021ம் தேதி கடன் கொடுத்து அன்றைய தினமே காசோலையும் பெற்றதாக தான் சொல்லியுள்ளீர்கள் என்றால் இல்லை. நான் பொய்யாக இல்லை என்று சொல்கிறேன் நான் அவ்வாறு தான் புகார் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்கள் என்றால் ஆமாம். மேலும் மசாஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பில் 06.01.2022ம் வருடம் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் ஆமாம். புகாரிலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் 1 வருடம் வித்தியாசமாக இருக்கிறது என்றால் ஆமாம். நான் 07.07.2022ம் தேதி தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்திலும் காசோலையானது 06.01.2021ம் தேதி கொடுத்ததாக தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். மேலும் சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் 06.01.2021ம் தேதி தான் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். இந்த பிரச்சனையை இதுவரை நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் 1 வருடம் வேறுபடுவதால் வழக்கின் உண்மை தன்மை இல்லை என்றால் சரியல்ல.

13. நான் எதிரி மீது தாக்கல் செய்துள்ள மற்றொரு காசோலை வழக்கான 65/2022லும் எதிரிக்கு கடன் கொடுத்த தொகை, காசோலை பெற்ற தொகை, புரோ நோட்டு தேதி, புரோ நோட்டு சாட்சிகள், வழக்கறிஞர் அறிவிப்பு, ரிட்டன் மெமோ ஆகியவை இந்த வழக்கில் சொன்னவாறே ஒரே தேதிகளாக உள்ளது என்றால் ஆமாம். ஒரே நாளில் நடந்த பண பரிவர்த்தனையை ஒரு வழக்கில் சொன்ன பொருண்மையை மற்றொரு வழக்கில் சொல்லவில்லை என்றால் ஆமாம். நான் உண்மையில் ஒரே நாளில் 5 இலட்ச ரூபாய் பணம் கொடுத்திருந்தால் இரு பண பரிவர்த்தனைகளை சொல்லியிருப்பேன் நான் சொன்னவாறு எந்த பணமும் கொடுக்காததால் தான் அதை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

14. சிசி 65/2022 நீதித்துறை நடுவர் நீதிமன்றம் , அருப்புக்கோட்டையில் நான் இந்த எதிரி ரோகினிக்கு எதிராக தாக்கல் செய்த புகார் மனு, கடனுறுதி சீட்டு, காசோலை, வங்கி செலான், ரிட்டன் மெமோ, வழக்கறிஞர் அறிவிப்பு, போஸ்டல் ரசீது, அஞ்சலக ஒப்புகை அட்டை சான்று நகல்கள் என்றால் ஆமாம். ( **புகார் மனு சான்று நகல் எசாஆ.1 ஆகவும், கடனுறுதி சீட்டு சான்று நகல் எசாஆ.2 ஆகவும், காசோலை சான்று நகல் எசாஆ.3 ஆகவும், வங்கி செலான் சான்று நகல் எசாஆ.4 ஆகவும், ரிட்டன் மெமோ சான்று நகல் எசாஆ.5 ஆகவும், வழக்கறிஞர் அறிவிப்பு சான்று நகல் எசாஆ.6 ஆகவும், போஸ்டல் ரசீது சான்று நகல் எசாஆ.7 ஆகவும், அஞ்சலக ஒப்புகை அட்டை சான்று நகல் எசாஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

15. ராமராஜ் என்பவர் எதிரி மீது காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் நீதிமன்றத்திற்கு என்னுடைய வழக்கிற்கு வந்தபின்பு தான் தெரியும். ராமராஜ் எதிரிக்கு நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் 06.01.2021ம் தேதியில் இந்த வழக்கின் தன்மையை மாதிரியே வழக்கு தாக்கல் செய்யப்பட்டு புகார்தாரருக்கு பணம் கொடுக்கப்பட்டு சமராசமாக பேசப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது என்றால் எந்த தேதியில் எதிரிக்கு பணம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. ஆனால் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று சமாதானமாக முடிக்கப்பட்டதை தெரிந்து கொண்டேன்.

16. நான் ராமராஜுக்கு எதிரி ரோகினி உறவினர் என்றால் அது எனக்கு தெரியாது. மசாஆ.1 கடனுறுதி சீட்டில் எழுதியதும் சாட்சியும் என்ற இடத்தில் காமராஜ் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கடனுறுதி சீட்டிலும் எழுதியதும் சாட்சியுமாக காமராஜ் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் தான் ராமராஜ் என்பவரும் அதே தேதியில் எதிரிக்கு ரூபாய் 2, 50,000/– கடன் கொடுத்ததாகவும் என்னுடைய வழக்கில் கடனுறுதி சீட்டு எழுதிய காமராஜ் என்பவரும் அதை எழுதியுள்ளதில் இருந்தே இந்த காசோலைகள் எனக்கு கொடுக்கப்படவில்லை என்றும் ராமராஜுவிற்கு தான் கொடுக்கப்பட்டது என்றும் அந்த காசோலையை வைத்து ராமராஜுவிற்காக நான் எதிரி மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

17. மசாஆ.1 ஐ எழுதிய காமராஜ் ஜெயவிலாஸ் பஸ்சில் வேலை செய்யும் தொழிலாளி என்றால் ஆமாம். அவர் நான் கேட்டு கொண்டதற்கு இணங்க கடனுறுதி சீட்டில் கையெழுத்து செய்துள்ளார் என்றும் அவர் எதிரி ரோகினியை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மசாஆ.1ல்

முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து மட்டும் இருக்கிறது அவர் பெயர் முகவரி எதுவும் சொல்லவில்லை என்றால் எதிரியின் கணவர் கோபாலகிருஷ்ணன் தான் கையெழுத்து செய்தார். நான் கடன் கொடுத்ததாக சொல்லும் அதே தேதி, அதே எதிரி, அதே கடன் தொகை, அதே காசோலை தொகை, வழக்கறிஞர் அறிவிப்பு தேதி, புகார் தேதி ஆகியவை 4 வழக்குகளான சிசி 60/2022, 61/2022, 64/2022, 65/2022 ஆகிய வழக்குகளாக ராமராஜ் என்ற ஒரு நபரால் தயார் செய்யப்பட்டு என்மூலமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

18. எதிரிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றும் என்னிடம் எந்த கடனும் நான் சொன்னவாறு பெறவில்லை என்றால் சரியல்ல. ராமராஜ் என்பவர் அருப்புக்கோட்டை பூக்கடை பஜாரில் ராஜ் பைனான்ஸ் என்ற பெயரில் வார வட்டிக்கு கடன் கொடுக்கும் அவர் மாதம் 1 இலட்ச ரூபாய்க்கு 12,000 ரூபாய் வட்டி வாங்கி வந்தார் என்றும் அவரிடம் எதிரியின் கணவர் 2018ம் வருடம் 1இலட்சம் கடன் வாங்கும்போது செக்யூரிட்டியாக 10 காசோலைகள் மற்றும் 10 புரோநோட்டுகள் கொடுத்ததை ராமராஜ் என்மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. இந்த கடனுக்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை எதிரி எந்த விதமான கடனும் பெறவில்லை என்றால் சரியல்ல.